மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

முன்னிலை: **திரு.பா.சரவணன், பி.எஸ்.சி., பி.எல்.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 16 ஆம் நாள் செவ்வாய்கிழமை

இடைநிலை மனு எண்.2/2023 ல்
அசல் வழக்கு எண்.182/2023

அய்யர் (எ) ஆண்டி,
த/பெ. லேட்.கோ.பெ.குஞ்சான்,
தாயனூர், ஸ்ரீரங்கம் வட்டம்,
திருச்சி மாவட்டம். ... மனுதாரர்/ வாதி

/எதிர் /

1) பங்கஜவள்ளி,
க/பெ.லேட்.முத்துக்குமார்,
கதவு எண்.2/336, மெயின்ரோடு,
கைக்காட்டி, பள்ளக்காடு,
அதவத்துர் மேற்கு,
ஸ்ரீரங்கம் வட்டம்,
திருச்சி மாவட்டம்.

2) மைனர் தயானந்தன்,
த/பெ.லேட்.முத்துக்குமார்,

3) மைனர் சந்திரபிரகாஷ்,
த/பெ.லேட்.முத்துக்குமார்,

(2,3 மைனர்களுக்காக இயற்கை காப்பாளரும், பாதுகாவலரான அவரது தாயார் 1ம் பிரதிவாதி பங்கஜவள்ளி.)

...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு, கடந்த 04.06.2026 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.செந்தில் அவர்கள், முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்

திரு.N.அன்பழகன் அவர்கள் முன்னிலையாகியும், மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதவுரைகளைக் கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

உத்தரவு

1) மனுதாரர்/வாதி தரப்பில், உரிமையியல் நடைமுறைச் சட்டம் வகுமுறை 38 விதி 5 மற்றும் பிரிவு 151ன் கீழ், தாவாதொகை **ரூ.19,63,435/-** மற்றும் அதற்கான வட்டி மற்றும் செலவுத்தொகை கோரியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளை, உரிய பிணையம்(security) செலுத்த உத்தரவிடக் கோரியும், தவறும்பட்சத்தில், மனு சொத்தை பற்றுகை செய்ய உத்தரவிடக் கோரியும், இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.1) மனுதாரர்/வாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், மனுவில் கூறியுள்ள சங்கதிகளையே விவரித்துக் கூறி, 1ம் பிரதிவாதியின் கணவரும், 2,3 பிரதிவாதிகளின் தகப்பானாருமான முத்துக்குமார், கடந்த 20.06.2020 அன்று அவரது குடும்ப செலவுக்காகவும், முன் கடனை தீர்ப்பதற்காகவும் ரூ.13,00,000/-ஐ கடனாகப் பெற்றுக்கொண்டு, மேற்படி கடனுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.2.00/-வீதம் வட்டி சேர்த்து வேண்டும்பொழுது வாதிக்கோ அல்லது அவரது உத்தரவு பெற்றவருக்கோ

வட்டியையும், அசலையும் சேர்த்து திருப்பிக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு ஒரு புரோநோட்டை சாட்சிகள் முன்பாக எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி தேதியிலேயே, செக்யூரிட்டிக்காக முத்துக்குமார் பெயரிலுள்ள 31.01.2005 ம் தேதியிட்ட உறையூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.373/2005 ஆக பதிவு செய்யப்பட்ட அசல் கிரையப்பத்திரத்தையும் மற்றும் 2, 3 பிரதிவாதிகள் மைனர்கள் என்பதால், அவர்களது கார்டியன் என்ற முறையில் அவர்களது பெயரிலுள்ள 07.10.2008 ம் தேதியிட்ட உறையூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.6577/2008 ஆக பதிவு செய்யப்பட்ட அசல் கிரையப்பத்திரத்தையும் வாதி வசம் ஒப்படைத்து, புரோநோட்டுக்குண்டான அசல் மற்றும் வட்டித் தொகையை திரும்ப தனது வசம் செலுத்தி, புரோநோட்டு மற்றும் இரண்டு அசல் கிரையப்பத்திரங்களையும் பெற்றுக்கொள்வதாகக் கூறி மேற்படி கடன் தொகையை பெற்றுக்கொண்டார் என்றும், அதன்பின்னிட்டு, முத்துக்குமார் புரோநோட்டில் கண்ட அசல் மற்றும் வட்டியை செலுத்தாமல் காலம் தாழ்த்தி வந்துள்ளார் என்றும், அவர் 25.01.2023 ம் தேதியன்று இறந்துவிட்ட விபரம் மனுதாரருக்கு தெரிய வந்தது என்றும், அதன்பின்னர், முத்துக்குமாரின் வாரிசுகள் என்ற முறையில் பிரதிவாதிகளை நேரில் அணுகி அசல் மற்றும் அதற்குண்டான வட்டியை செலுத்தும்படி கேட்டபோது பிரதிவாதிகள் செலுத்துவதாக கூறி செலுத்தாமல் காலம் தாழ்த்தி வந்ததால் மனுதாரர்/வாதி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்று வாதிட்டார்.

2.2) மனுதாரர்/வாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் மேலும் தனது வாதத்தில், அசல் வழக்கு தாக்கல் செய்த நாள் வரை அசல், வட்டி ரூ.19,63,435/-ஐ எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கொடுக்க வேண்டியுள்ளது. இதற்கு மனுதாரர் நீதிமன்ற கட்டணம் ரூ.58,903.50/- செலுத்தியுள்ளார். எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் அசல் வழக்கில் பிறப்பிக்கப்படக்கூடிய தீர்ப்பாணையின் பலனை வாதிக்கு கிடைக்காமல் ஏமாற்றும் நோக்கத்தோடு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு சொந்தமான நிலத்தினை வேறு நபர்களுக்கு கிரையம் செய்வதற்கு தீவிரமாக முற்பட்டு வருகின்றனர், அவ்வாறு கிரையம் செய்துவிட்டால் மனுதாரருக்கு அசல் வழக்கில் பிறப்பிக்ககூடிய தீர்ப்பாணையில் கண்ட தொகையை வசூல் செய்ய முடியாமல் போய்விடும். எனவே, எதிர்மனுதாரர்களுக்கு மனு சொத்தினை பொருத்து செக்யூரிட்டி பாண்டு எழுதிக்கொடுக்கும் வகையில் அறிவிப்பு அனுப்பியும், தவறும்பட்சத்தில், மனு சொத்தினை தீர்ப்புக்கு முன் உடன் பற்றுகை செய்ய உத்திரவிடக் கோரியும்இந்த மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு யாதொரு இழப்பும் ஏற்படாது என்றும், எனவே, மனுவை அனுமதிக்க வேண்டுமென்றும் வாதிட்டார்.

3.1) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிருரையில் கூறியுள்ள சங்கதிகளையே விவரித்துக் கூறி, இறந்துபோன முத்துக்குமார் 1ம் எதிர்மனுதாரரின் கணவர் அவரது அவசரத் தேவைக்காக மனுதாரரிடம் ரூ. 1,70,000/- மட்டுமே கடனாகப்

பெற்றார் என்றும், அதற்குப் ஆதரவாக அவரிடம் பூர்த்தி செய்யப்படாத ஒரு புரோநோட்டில் கையெழுத்திட்டுக் கொடுத்ததுடன், அசல் கிரைய ஆவணங்களையும் (ஆவண எண்கள்: 373/2005, 6577/2008) ஒப்படைத்திருந்தார் என்றும், இக்கடனுக்கான வட்டி மாதந்தோறும் 2% வீதம் முறையாகச் செலுத்தப்பட்டு வந்தது என்றும், இந்நிலையில், கடந்த 25.02.2023 அன்று முத்துக்குமார் இயற்கை எய்திய பிறகு, மனுதாரர் பேராசை கொண்டு, தன்னிடமிருந்த பூர்த்தி செய்யப்படாத புரோநோட்டைத் தவறாகப் பயன்படுத்தி, பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்கும் நோக்கில் ரூ. 13,00,000/- கடனாகப் பெற்றதாக ஒரு பொய்யான வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் என்று வாதிட்டார்.

3.2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் மேலும் தனது வாதத்தில், இறந்துபோன முத்துக்குமார் ஒரு தினக்கூலி பெயிண்டிங் தொழிலாளி என்றும், அவருடைய தினசரி வருமானம் ரூ. 500/- மற்றும் மாதாந்திர வருமானம் அதிகபட்சம் ரூ. 12,000/- என்ற நிலையில், மாதம் ரூ.26,000/- வட்டி கட்ட வேண்டிய அளவிற்கு ரூ.13 லட்சத்தை ஒரே தவணையாகக் கடனாகப் பெற அவருக்கு எவ்வித பொருளாதாரத் தகுதியோ அல்லது தேவையோ கிடையாது என்றும், முத்துக்குமார் இறந்த பிறகு, ஊர்ப் பெரியவர்கள் முன்னிலையில் நடந்த பஞ்சாயத்தில், அசல் தொகையான ரூ.1,70,000/- கொடுக்கும் வரை, பிரதிவாதியின் நிலத்தில் மனுதாரர் உழவுடைமை செய்துகொள்ள

ஒப்புக்கொண்டார் என்றும், அதன்பிறகு மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை விற்கிரையத்திற்கு கேட்டு, 1வது எதிர்மனுதாரர் கொடுக்க மறுத்த காரணத்தால், மனுதாரர் கடந்த 06.04.2023ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அதற்கு 1வது எதிர்மனுதாரர் அவரது வழக்கறிஞர் மூலம் 23.03.2023ம் பதிலறிப்பு கொடுத்துள்ளார். 1ம் எதிர்மனுதாரரின் கணவர் அவர் இறக்கு வரை அவர் பெற்ற கடன் ரூ.1,70,000/-க்கு மாத மாதம் வட்டி தவறாமல் கொடுத்து வந்ததாக 1ம் எதிர்மனுதாரர் தெரிவித்தார். 20.06.2020ம் தேதி ரூ.13 லட்சம் கடன் கொடுத்திருந்தால், கடந்த 3 ஆண்டுகளாக வட்டி வராத பட்சத்தில் ஏன் அவர் எந்தவொரு சட்டப்பூர்வ மேல்நடவடிக்கையும் அல்லது வழக்கறிஞர் அறிவிப்பும் (Legal Notice) அனுப்பவில்லை மேலும், பிரதிவாதிகள் சொத்தை விற்க முயல்வதாக மனுதாரர் கூறுவது அப்பட்டமான பொய். அசல் கிரையப் பத்திரங்கள் அனைத்தும் மனுதாரர் வசம் இருக்கும்போது சொத்தை விற்க முடியாது என்பது மனுதாரருக்குத் தெரிந்தும், நீதிமன்றத்தைத் தவறாக வழிநடத்துகிறார் என்றும், ஆனால், தற்போது இந்த வழக்கைத் தவறான நோக்கில் தொடர்ந்துள்ளார் என்றும், 1ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புரோநோட்டு மற்றும் சாட்சிகளின் விபரங்களை ஆய்வு செய்து, காலதாமதமின்றி முதன்மை வழக்கில் தனது விரிவான எதிர்வாக்குமூலத்தை தாக்கல் செய்து வழக்கை நடத்தத் தயாராக உள்ளார் என்றும், எனவே, இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதிட்டார்.

4) இந்த மனுவில் பரிசீலிக்கப்பட வேண்டியது என்னவென்றால் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இருதரப்பு கருத்துக்களும், வழக்காவணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

6) இந்த அசல் வழக்கானது மனுதாரர்/வாதியிடம், 1ம் எதிர்மனுதாரரின் கணவர் முத்துக்குமார், 20.06.2020 அன்று அவரது அவசர தேவைக்காக ரூ.13,00,000/–(ரூபாய் பதிமூன்று இலட்சம் மட்டும்) கடனாகப் பெற்றுக்கொண்டு, மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு ரூ.2/–வீதம் வட்டியுடன் திருப்பித்தருவதாக ஒப்புக்கொண்டு, அதற்காக புரோநோட்டு மற்றும் அசல் கிரையப்பத்திரம் (ஆவண எண்.373/2005 மற்றும் 6577/2008) எழுதித் தந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. 25.01.2023ம் முத்துகுமார் இறந்துவிட்டதால், பிரதிவாதிகளிடம் நேரில் அணுகி செலுத்தும்படி கேட்டும், காலம் தாழ்த்தியதால், வழக்கு தாக்கல் செய்த நாள் வரை அசல், வட்டி ரூ.19,63,435/– லேட். முத்துக்குமாரின் வாரிசுகள் என்ற முறையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கொடுக்க வேண்டியுள்ளதாகக் கூறி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. .

7) தாவா கடனுறுதிச் சீட்டின் உண்மைதன்மை மற்றும் அதனடிப்படையில் வாதிக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பதைப் பொறுத்து அசல் வழக்கில் தான் தீர்மானிக்க முடியும். மனுதாரர்/வாதி தரப்பில், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மனு சொத்துக்களை விற்க முயற்சி செய்து

வருவதாகவும், அவர்கள் அவ்வாறு செய்துவிட்டால், தாவா கடனுறுதிச் சீட்டு தொகையை வசூலிக்க இயலாமல் போய்விடுமென்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால், மனுவில் 2 வது இன சொத்தாகக் காட்டப்பட்ட ஆவண எண்.6577/2008 நாள் 07.10.2008 தேதியிட்ட கிரைய ஆவணம் இளவர்கள்/2,3 பிரதிவாதிகள் பெயரில் கார்டியன் என்ற கோதாவில் முத்துக்குமாரால் கிரையம் பெறப்பட்டுள்ளது. முதல்நிலையில் மனுவை பரிசீலிக்கையில், மேற்படி மனு 2 வது சொத்து இளவர்களின் தனிப்பட்ட சொத்து என்பதால், அவர்களது தந்தை பெற்றதாகக் கூறும் கடன் தொகையை செலுத்த வேண்டிய பொறுப்பு, இளவர்களுக்கு நேரடியாக இல்லை. மாறாக, இளவர்கள் அவர்களது தந்தையிடமிருந்து பெற்ற சொத்துக்களிலிருந்து மட்டுமே, மேற்படி கடனை செலுத்த கடமைப்பட்டவராவார்கள். எனினும் இதுதொடர்பாக அதற்குரிய சமயத்தில்தான் பரிசீலிக்க முடியும். எனவே, தற்போதைய நிலையில் இளவர்களின் பெயரில் கிரையம் பெறப்பட்ட 2 வது இன சொத்தைப் பொறுத்து, தீர்ப்புக்கு முன் பற்றுகை செய்ய பரிகாரம் வழங்க இயலாது.

8) மனுவில் கண்ட, 1 வது இனச் சொத்தான 31.05.2005 தேதியிட்ட கிரைய ஆவண எண்.373/2005 தேதியிட்ட சொத்து முத்துக்குமார் பெயரில் கிரையம் பெறப்பட்டுள்ளது. அவ்வாறு இந்த வழக்கு நிலுவையிலிருக்கும் போதே, எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் மனு 1 வது அயிட்ட சொத்தை விற்று விட்டால், அசல் வழக்கில் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு எதுவும் பிறப்பிக்கப்பட்டாலும், அதை நிறைவேற்ற முடியாமல் போய்விடும் சூழ்நிலை

உள்ளது. எனவே, முதல்நிலை வழக்கும், சமநிலை வாய்ப்பும் மனு 1வது அயிட்ட சொத்தைப் பொறுத்து மட்டும் மனுதாரர்/வாதிக்கு ஆதரவாகவே உள்ளது. மனு 1வது அயிட்ட சொத்தைப் பொறுத்து மட்டும் மனுவை அனுமதிக்காவிட்டால் வாதிக்கு ஈடுசெய்ய முடியாத நிலை ஏற்படும். எனவே, மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள, இந்த மனு பின்வருமாறு பகுதியாக அனுமதிக்கத்தக்கதென முடிவு செய்யப்படுகிறது.

9) <u>முடிவாக:</u>

இந்த மனு பின்வருமாறு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

1) எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள், தாவாவில் மனுதாரர்/வாதி கோரியுள்ள தாவாதொகையான ரூ.19,63,435/- க்கான, உரிய உத்தரவாதத்தை(Security), 2 2 வாரங்களுக்குள் அளிக்க வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில், மனு 1வது அயிட்ட சொத்தைப் பொறுத்து மட்டும், தீர்ப்புக்கு முன் பற்றுகை செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

2) மனு 2வது சொத்து இளவர்களின் தனிப்பட்ட சொத்து என்பதால், தற்போதைய நிலையில், 2வது இன சொத்தைப் பொறுத்து, தீர்ப்புக்கு முன் பற்றுகை செய்ய பரிகாரம் வழங்க இயலாது என முடிவு செய்யப்படுகிறது.

3) மனு செலவுத்தொகை இல்லை. மீண்டும் அழைக்க 01.07.2026.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு,

இன்று 2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 16 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SARAVANAN B Digitally signed by SARAVANAN B Date: 2026.06.16 13:54:50 +0530

மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் : இல்லை

SARAVANAN B Digitally signed by SARAVANAN B Date: 2026.06.16 13:54:55 +0530

மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.